12.09.2024

O.S.No.254/2009

**பி.**வா.சா.3.திரு.ராஜா த.பெ.பொன்ராஜ்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

1. எனது கிரைய ஆவணப்படி நான் சர்வே எண்.17/1A1Aல் கண்டுள்ள சொத்தினை கிரையம் வாங்கியதாக எனது வழக்கு என்றால் சரிதான். சர்வே எண்.17/1A1Aல் கண்டுள்ள நான் கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் சொத்தினை பொறுத்து எனக்கு பிரச்சினை வரக்கூடாது என்பதற்காக தான் எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். தாவா வழக்கில் வாதிகள் தரப்பில் சொல்லப்பட்டுள்ள சர்வே எண்களுக்கும், நான் கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ-13 ரீசர்வே எண்.158/1 பார்ட் 1க்கு ஹெக்டேர் 3.42.0 ஏக்கர் 8 செண்டு 45 உள்ள மொத்த சொத்தில் மேல்புறத்தில் வடபுறம் ஒருபகுதி சதுர அடி 39520 உள்ள மொத்த சொத்தில் ஒரு பகுதி தென்புறம் சதுர அடி 19760 உள்ள மனையிடம் என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.17/1A1A என்பது சர்வே எண்.158/1லிருந்து உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான், எனது கிரைய பத்திரத்தின் படி உரிமை கோரும் இடம் சர்வே எண்.17/1A1A என்றால் சரிதான்.

2. எனது எதிர் வழக்குரையிலும் நான் சர்வே எண்.17/1A1A சொத்தினைதான் எனது சொத்தாக கூறி எதிர் வாதம் புரிந்துள்ளேன் என்றால் சரிதான். வாதிகள் தரப்பில் அவர்களுக்குரிய சொத்திற்கான சர்வே எண்ணாக 16/3C1B, 16/3C2, 17/9, 17/10, 17/12, 17/13 எனக்கூறிதான் வாதிகள் தரப்பில் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான், ஆனால் அது தவறானது ஆகும். நான் கிரையம் வாங்க நினைத்தது கோபாலகிருஷ்ண கோன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பவர் பத்திரம் பி.வா.சா.ஆ12 கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்ட் பற்றியோ, அந்த டிரஸ்டானது நீதிமன்றத்தில் அனுமதி பெற்றது பற்றியோ எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ -13 ஆவணமான எனது கிரைய பத்திரத்தில் கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்து எனவும், அந்த டிரஸ்டுக்காக விற்கப்பட்ட சொத்து எனவும் சொல்லப்படவில்லை என்றோ எதுவும் காணப்படவில்லை என்றால் சரிதான்.

3. அதே போல் நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ-14 கிரைய ஆவணத்தில் கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்தாகவோ, டிரஸ்டுக்காக விற்கப்பட்ட சொத்தாகவோ எதுவும் காணப்படவில்லை என்றால் சரிதான். வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ-1 முதல் வா.சா.ஆ-5 வரையான கிரைய ஆவணங்களை வாதிகள் தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி ஆவணங்கள் அனைத்தும் 1983ம் ஆண்டே பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் அந்த ஆவணங்களை நான் பார்த்தில்லை, நான் இப்போதுதான் அந்த ஆவணங்களை பார்க்கின்றேன். வா.சா.ஆ-1 முதல் வா.சா.ஆ-5 கிரைய

ஆவணங்களின் படி வாதிகள் கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை நீதிமன்ற அனுமதிபெற்ற பின்பு கோபாலகிருஷண கோன்



டிரஸ்டின் டிரஸ்டி என்ற கோதாவில் இஎம்ஜி சௌந்திராஜன் அவர்கள் நேரிடையாக கிரையம் செய்து கொடுத்து அதில் கண்ட கிரைய தொகையை வங்கி வரைவோலை மூலமாக கோபாலகிருஷ்ண கோன் டிரஸ்டுக்கு பெற்று கிரையம் பதிந்து கொடுத்துள்ளார் என்ற விவரங்கள் வா.சா.ஆ-1 முதல் வா.சா.ஆ-5 ஆவணங்களில் காணப்படுகிறது என்றால் சரிதான், ஆனால் அது பொய்யான ஆவணங்கள் ஆகும்.

4. கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்டக்கு பாத்தியப்பட்ட சொத்தினை நான் கிரைய பெற்றதாக எனது கிரைய ஆவணத்திலோ, அது சம்பந்தபட்ட பவர் பத்திரத்திலோ காணப்பபடாததால் கோபாலகிருஷணகோன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை நான் கிரையம் வாங்கியதாக சொல்வதும் அத் னதொடர்ச்சியாக நான் அந்த சொத்தில் நான் அனுபவத்தில் இருந்ததாக சொல்வது இந்த வழக்கிற்காக நான் சொல்லும் பொய்யான சங்கதி என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு எத்தனை நாட்களாக அந்த சொத்தினை பற்றி விசாரித்தேன் என்றால் ஒரு வாரமாக விசாரித்தேன். அவ்வாறு விசாரித்தபோது வருவாய் துறையினர் பல உட்பிரிவுகள் செய்துள்ளார்கள் என்ற விவரம் நான் தெரிந்து கொண்டேனா என்றால் சர்வே எண்.158/1ல் பல உட்பிரிவு உள்ளது என்பதனை நான் தெரிந்து கொண்டேன். கிரையம் வாங்குவதற்கு முன்பு சர்வே எண்.158/1 என இருந்தது தான் எனக்கு தெரியும், கிரையம் வாங்கிய பின்பு பட்டா ஏற்பட்ட போது தான் அதன் உட்பிரிவான சர்வே எண்.171A1A எனக்கு தெரிய வந்தது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.